# கிளி/ மாயவனூர் வித்தியாலயம்

# பரிசில் நாள் அறிக்கை

## - 2019 -

**தலைமை**

**திருமதி. லக்ஷ்சாந்தி கோபாலராசா** அவர்கள்
(பாடசாலை முதல்வர்)

**முதன்மை விருந்தினர்**

**செல்வி.ஜனனி சிவப்பிரகாசம்** அவர்கள்
(கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் - கிளி/ கல்விவலயம்)

**29.11.2019**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ மாயவனூர் வித்தியாலயம்

## *பரிசில் நாள் - 2019*

**காலம் :- 29.11.2019 வெள்ளிக்கிழமை**
**நேரம் :- மு.ப 9.30 மணி**

### தலைவர்

**திருமதி. லக்ஷ்சாந்தி கோபாலராசா அவர்கள்**
(வித்தியாலய முதல்வர்)

### முதன்மை விருந்தினர்

**செல்வி. ஜனனி சிவப்பிரகாசம் அவர்கள்**
(கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
கிளி/ கல்விவலயம்)

### சிறப்பு விருந்தினர்

**திரு. பாலையா ஸ்ரீஸ்குமார் அவர்கள்**
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கிளி/ கல்வி வலயம்)

### கௌரவ விருந்தினர்

**திரு. செல்லத்தம்பி ரூபசிங்கம் அவர்கள்**
(ஓய்வுநிலை நிர்வாக அலுவலர்)

### நூல் மதிப்பீட்டுரை

**திரு. பொன்னையா சுரேந்திரன் அவர்கள்**
(தற்காலிக விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்)

### அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"அறிவே எமது உயிர்"

## தூரநோக்கு

நிதமும் மாறிக்கொண்டிருக்கும் உலகிற்கேற்ப வளமான சமூகத்தை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று

"உரிய தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக கிடைக்கக்கூடிய வளங்களை திசைக்கோட்படுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- அரங்கத் திரை நீக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- கட்டுரைத் தொகுப்பு வெளியீடு
- பரிசில் வழங்கல்
- கௌரவ விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை விபரம்

1. பாடசாலையின் பெயர் :- கிளி/மாயவனூர் வித்தியாலயம்.
2. பாடசாலை முகவரி :- மாயவனூர், வட்டக்கச்சி.
3. மாகாணம் :- வடமாகாணம்
4. மாவட்டம் :- கிளிநொச்சி
5. கல்வி வலயம் :- கிளிநொச்சி
6. கல்விக்கோட்டம் :- கரைச்சி
7. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :- 01.01.2003
8. பாடசாலையின் வகை :- வகை III
9. வகுப்புக்கள் :- தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
10. கிராம சேவையாளர் பிரிவு :- KN/40 மாயவனூர்
11. பிரதேச செயலர் பிரிவு :- கரைச்சி
12. பாடசாலையின் முதல் முதல்வர் :- திருமதி.ல.கோபாலராசா
13. பாடசாலை அடையாள இலக்கம் :- 1101036
14. பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் :- 10098
15. தொலைபேசி இலக்கம் :- 021 320 8363
16. பாடசாலையின் காணியின் அளவு :- 5 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை 2019

கிளி/ மாயவனூர் கிராமத்தில் ஆரம்பக்கல்விக்கு அடித்தளமாக விளங்கும் கிளி/ மாயவனூர் வித்தியாலயமானது இன்று தனது 16வது பரிசில் நாளை மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இன்றைய பரிசில் நாளில் மற்றுமொரு சிறப்பு நிகழ்வாக அரங்கத் திரைச்சீலை திரைநீக்க நிகழ்வும் அதனைத் தொடர்ந்து கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம் பெற இருப்பதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

இன்றைய நிகழ்விற்கு அன்பான அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் குரு முதல்வர்களே, முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் கிளிநொச்சி கல்வி வலயத்தினுடைய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜனனி சிவப்பிரகாசம் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் கிளிநொச்சி கல்விவலயத்தினுடைய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. பாலையா ஸ்ரீஸ்குமார் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் (ஓய்வு நிலை நிர்வாக கிராம அலுவலர்) திரு. செல்லத்தம்பி ரூபசிங்கம் அவர்களே, நூல் மதிப்பீட்டுரையை வழங்க வருகை வந்திருக்கும் கிழக்கு பல்கலைக்கழகத்தினுடைய தற்காலிக விரிவுரையாளர் திரு. பொன்னையா சுரேந்திரன் அவர்களே,

மற்றும் கல்விப்புலம் சார்ந்த பெரியோர்களே, ஏனைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளே, அயற் பாடசாலைகளினுடைய அதிபர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, அன்பு சார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, அனைவருக்கும் எனது காலை வணக்கம்.

கடந்த ஆண்டில் பதினைந்தாவது ஆண்டு நிறைவையிட்டு படிகவிழா மலரினை வெளியிட்டிருந்தோம் அதனைத் தொடர்ந்து இந்த வருடம் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கட்டுரைத் தொகுப்பினை வடிவமைத்து மாணவர்களின் வாசிப்பு, எழுத்தாக்கதிறன் விருத்தியினை விருத்தி செய்யும் முகமாக இன்று மாணவர்களின் கைகளில் தவள விடுகின்றோம். இனி வரும் காலங்களிலும் தொடர்ந்த ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் பயன்கருதி நூல்களை வெளியிட தீர்மானித்துள்ளோம்.

எமது பாடசாலை மாணவர்கள் இயல், இசை, நாடகம், விளையாட்டு, தன்னம்பிக்கை, சுயமாக செயற்படும் ஆற்றல் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ள இவர்கள் கற்றலிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் கோட்டமட்ட, வலயமட்ட, விளையாட்டுக்களிலும் ஆக்கத்திறன் போட்டிகளிலும், பாடசாலையில் நடைபெறும் ஏனைய போட்டி நிகழ்வுகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி பரிசில்களையும் பெற்றுள்ளனர். அந்த வகையில் தரம் 5 மாணவர்கள் கிளி/ வட்டக்கச்சி வட்டகை பாடசாலைகளுக்கிடையிலான 2019இல் நடைபெற்ற தாச்சி போட்டியில் செல்வன் நா.திசாந்தன் சிறந்த "கிளி" வீரனாக தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணம் பெற்றுக் கொண்டமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

அத்துடன் விசேட தேவையுள்ள மாணவர்கள் வலயமட்ட ஆக்கத்திறன் போட்டியில் பங்கு பற்றி செல்வி ர.சங்கவி, செல்வன். ம.டிலான், செல்வி நி.நிலாஜினி முதல் இடங்களை பெற்றுள்ளனர். மேலும் தரம் 5 மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைபரிசில் பரீட்சை பெறுபேற்று சித்திவீதமானது சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் அதிகரித்திருப்பினும் எதிர்வரும் காலங்களில் மேலும் அதிகரிக்கும் நோக்குடன் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். மேலும் எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்ற மாணவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகம் செல்வது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் செ.கபிர்ஷனா சென்ற வருடம் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் லீகஸ் நிறுவனத்தினர் கற்றலில் இடர்படுகின்ற 10 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருகின்றனர். இச் செயற்பாடானது. வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இவ்வருடம் துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. இவ் விளையாட்டு முற்றமானது எமது பாடசாலை மாணவர்களின் உடல், உள, ஆரோக்கிய செயற்பாட்டிற்கும் மாணவர்களின் மகிழ்ச்சிகரமான செயற்பாட்டிற்கும், திறன்விருத்திக்கும் அடித்தளமாக அமைகின்றது.

அத்துடன் டென்மார்கில் வசித்து வரும் ஜெனதாஸ் பாரதி அவர்கள் photo copy இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மேலும் டென்மார்க் ஸ்ரூவர் மாலதிக்கலைக் கூட அமைப்பினர் மேடைக்கான திரையினை அன்பளிப்பு செய்துள்ளனர். இவ்வாறாக புலம்பெயர் வாழ் உறவுகள் எமது பாடசாலைக்கு உதவிகளை நல்கி வருவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாடசாலைத் தேவைகைள இனங்கண்டு உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்பார்ந்த முதன்மை விருந்தினர் அவர்களே இங்கு விசேட தேவையுள்ள 05 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கான விசேட தேவை அலகு ஒன்றினையும் மற்றும் ஆங்கில பாடத்திற்குரிய ஆசிரியர் ஒருவரையும் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ் அறிக்கையின் நிறைவாக அன்பான மாணவச் செல்வங்களே இந் நிகழ்வானது கற்றலையும், இணைபாடவிதான செயற்பாடுகளையும் ஊக்குவிக்கின்ற நிகழ்வாகும். நீங்கள் அனைவரும் ஒழுக்கத்திலும், கல்வியிலும், சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். மேலும்.

எமது பாடசாலை ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் மனம் கொண்டவர்கள் அவர்களையும் இந்நாளில் பாராட்டி எமது பாடசாலை பெற்றோர்களும் பாடசாலையில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். தொடர்ந்து இந் நிகழ்விற்கு வருகை தந்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் மதிப்பீட்டுரையாளர் மற்றும் ஏனைய விருந்தினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர்களின் விபரம்

## தரம் - 01

| மாணவர் பெயர் | பதக்கம் பெறுவோர்(70 புள்ளிக்கு மேல்) |
|---|---|
| 01. டி. வர்மிதன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02. சி. ஜிந்துஷா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 03. அ. அபினயா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 04. ற. விதுஷாயினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 05. சூ. சுவேதா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |

## தரம் - 01

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. கோ. வின்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02. ச. சபிசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 03. சு. சுகந்தன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 04. உ. அஸ்வின் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 05. சு. எழிலவன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 06. அ. எலிசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 07. மு. அபிசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 08. கி. சன்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 09. க. ஷன்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 10. ம. தேனுசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 11. கு. அபிஷானி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 12. ஜெ. கனிசிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 13. ப. பவிஷாளினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 14. செ. யதுர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 15. இ. திருஷிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 02

| மாணவர் பெயர் | பதக்கம் பெறுவோர்(70 புள்ளிக்கு மேல்) |
|---|---|
| 01. லோ. ஸகீரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02. செ. ஷால்ரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 03. கி. கேதீஸ்வரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 04. பு. அம்சாந் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 05. சி. ரினோஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 06. சி. லபிசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 07. செ. ஜசீனா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 08. லி. அபிஷாயினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 09. கோ. கோபிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 10. ய. சஸ்மி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 11. இ. தனுசிகன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |

## தரம் - 02

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. பா. டுசான் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02. தெ. றொக்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 03. ர. அபிஷாந் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 04. ய. யதுர்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 05. பா. திலக்ஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 06. சி. மயூட்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 07. அ. நிருஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 08. த. இனியவன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 09. பா. றெபேக்கா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 10. த. அபிஷா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 11. ஸ்ரீ. றெபேக்கா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 12. றி. ஜெறோமிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 13. சு. சதுர்விகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 14. ம. அபிநயா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 15. கி. தஸ்மிதா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 16. து. அபிராமி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 03

| மாணவர் பெயர் | பதக்கம் பெறுவோர்(70 புள்ளிக்கு மேல்) |
|---|---|
| 01. பா. கேதுசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 02. மோ. சரணியா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 03. மோ. சரணிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 04. பு. நிதர்சனா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 05. ப. வினுஜா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |

## தரம் - 03

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. க. சஞ்சை | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 02. ரெ. அபிஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 03. உ. விதுசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 04. இ. யனுயன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 05. தி. யோசுவா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 06. சி. அஜந்தன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 07. எ. டனுசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 08. ம. துசாளன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 09. கி. கிருசாந்தினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 10. உ. பதுமிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 11. பி. விதுரா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 12. சி. ஜீவிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 13. சு. டன்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 14. சு. சுதர்சினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 15. ப. வினுஜா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 16. செ. காஞ்சனா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 17. ஞா. யதுர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 18. உ. யதுர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |

## தரம் – 04

| மாணவர் பெயர் | பதக்கம் பெறுவோர்(70 புள்ளிக்கு மேல்) |
|---|---|
| 01. நா. சாதுரியன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 02. ப. கம்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 03. ப. குகேந்தினி | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 04

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. சி. டினோஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 02. செ. டிலக்ஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 03. அ. உஷாந்தன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 04. செ. செந்தூரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 05. சு. விதுசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 06. வி. வேணுஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 07. த. இனிதன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 08. அ. அபிஷா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 09. ச. கனிநிலா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 10. ப. சிந்து | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 11. சு. ஜதுர்சிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |

## தரம் - 05

| மாணவர் பெயர் | பதக்கம் பெறுவோர்(70 புள்ளிக்கு மேல்) |
|---|---|
| 01. ம. கபிலா | 124, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் |
| 02. ச. நிக்சனா | 119, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 03. செ. கார்த்திகா | 115, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் |
| 04. செ. தனுசியா | 104, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் |
| 05. நா. திஷாந்தன் | 98, 70 புள்ளிக்கு மேல் |
| 06. ச. சாளினி | 93, 70 புள்ளிக்கு மேல் |
| 07. பா. சுவர்ணா | 92, 70 புள்ளிக்கு மேல் |
| 08. ஸ்ரீ. றெசினா | 90, 70 புள்ளிக்கு மேல் |
| 09. அ. ஜிந்துயன் | 89, 70 புள்ளிக்கு மேல் |
| 10. ர. வர்ஷனா | 89, 70 புள்ளிக்கு மேல் |
| 11. கு. நிஷா | 86, 70 புள்ளிக்கு மேல் |

## தரம் – 05

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. வி. யனுசியா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், ஆங்கிலம் |
| 02. ஜெ. ஜெனிஸ்ரா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், ஆங்கிலம் |
| 03. ம. மோசிகீறன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், ஆங்கிலம் |
| 04. ம. நவனீதன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், ஆங்கிலம் |
| 05. ச. கேசவன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், ஆங்கிலம் |

## விசேட தேவையுள்ள மாணவர்கள்

| மாணவர் பெயர் | பரிசில் பெறுவோர் விபரம் |
|---|---|
| 01. ம. டிலான் | ஆக்கச் செயற்பாடு |
| 02. நி. நிஷாந்தன் | ஆக்கச் செயற்பாடு |
| 03. ம. பிரவீன் | ஆக்கச் செயற்பாடு |
| 04. த. சங்கவி | ஆக்கச் செயற்பாடு |
| 05. து. யதுயாழினி | ஆக்கச் செயற்பாடு |

## கழுத்து மாலையும், பொன்னாடைகளும் அன்பளிப்பு செய்த பெற்றோர் விபரம்

1. ப. மோகன்ராஜ் 2. கி. டிறோசன் 3. ஸ்ரீ. கற்பககுமார்
4. சி. ஸ்ரீகாந்தன் 5. சி. கோவிந்தராசன் 6. க. கமலேஸ்வரன்
7. S. செல்வேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

பரிசளிப்பு நாள் நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும், இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் உதவி வழங்கியவர்களுக்கும், பொருளுதவி வழங்கியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும், பெற்றோர்களுக்கும், புலம்பெயர்வாழ் உறவுகளுக்கும், நலன்விரும்பிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கீதம்

இராகம் :- ஹம்சத்வனி                    தாளம் :- ஆதி

### பல்லவி

வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்திடுவோமே
வாழ்க எங்கள் மாயவனூர் வித்தியாலயம்.

### அனுபல்லவி

சேய்கள் அனைவரும் சேர்ந்துணை பணிந்துமே
தூய அறிவொளியை அள்ளித் தந்திட

### சரணம்

அமுது எங்கள் தமிழே இன்ப உயிர்த்தாயே
அரனும் அறிவுமாய் எம்மில் அமர்ந்திடவே
ஆங்கிலமொடு கணிதமும் சுற்றாடலை அறிந்திட
நவீன நுட்ப முறைகளை எமக்கு என்றும் புகட்டியே
(வாழ்க வாழ்க)

அன்பு தனை ஊட்டியே பண்புடனே அரவணைத்து
சமூகம் போற்றும் சிற்பிகளாய் காசினியில் ஒளிர்ந்திட
எமக்கு வழிகாட்டிடும் எம் ஆசான்களைப் பணிந்துமே
குன்றிலிட்ட தீபமாய் குவலயம் போற்ற வாழ்கவே.
(வாழ்க வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சக்தி பதிப்பகம் மீசாலை - 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org